**30.10.2025**

**MCOP.No.29/2023**

**ம.சா. 4: ஜெயபிரகாஷ்**

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) நான் விபத்து சமயத்தில் பஸ்சின் வலதுபுறம் ஓட்டுநர் கதவு அருகே சற்று பின்தள்ளி நின்று கொண்டு இருந்தேன். ம.சா.1 எனது அண்ணி. பெரியப்பா மகனின் மனைவி. அண்ணி முறையாகும். எனது அண்ணியும் விபத்தின்போது அங்கு இருந்தார். மேற்படி விபத்தில் அடிப்பட்டு காயம் அடைந்தவர்கள் அனைவரும் பஸ்சின் வலதுபுறம் நின்று கொண்டு இருந்த நபர்கள் தான். மேற்படி விபத்திற்கு மேற்படி பஸ்சின் ஓட்டுநர் மற்றும் லாரியின் ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் பேருந்து நிறுத்தம் கிடையாது என்றால் சரிதான். பேருந்து நிறுத்தம் இல்லாத இடத்தில் பேருந்து நிறுத்தியது பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவுதான்.

2) நான் விபத்தில் சிகிச்சை பெற்றதற்காக தொகையை இன்சூரன்ஸ் கிளைம் செய்தது போக மீதி தொகயை தான் நீதிமன்றத்தில் மருத்துவ தொகையின் இனங்களின் கீழ் இழப்பீடாக கோரி உள்ளேன். என்னுடைய வயது மற்றும் வருமானம் குறித்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் நான் தற்போது பணி செய்யும் இடத்தில் வேலை செய்யவில்லை. நான் Internal Auditor வேலை செய்து வருகிறேன். நான் தற்போது ரூ.60,000/- சம்பளம் வாங்கி வருகிறேன். விபத்தினால் எனக்கு எவ்வித வருமான இழப்போ உடல் ஊனமோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகை மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

3) விபத்து நடந்ததாக சொல்லும் இடம் பெத்தநாயக்கன்பாளையம் பேருராட்சி அலுவலகத்திற்கு முன்பாக என்றால் சரிதான். அந்த இடத்தில் அலுவலகத்தின் வெளிச்சம் சாலை விளக்கின் வெளிச்சம் அதிகமாகத்தான் இருக்கும் என்று சொன்னால் சாதாரணமாகத் தான் இருக்கும். அந்த இடத்தில் வாகனம் நின்று

கொண்டு இருப்பதை பின்னாடி வரும் வாகனங்கள் பார்க்க முடியும் என்றால் சரிதான். அந்த பேருந்து முன்புற விளக்கு மற்றும் பின்புற சிவப்பு விளக்குகளை எரிய விட்டு தான் நிறுத்தி இருந்தார்கள். மேற்படி இடத்தில் நாங்கள் தான் பேருந்தை நிறுத்த சொல்லி லக்கேஜ்களை ஏற்றிக்கொண்டு இருந்தேன் என்றால் நான் லக்கேஜை உள்ளே வைத்து விட்டு வெளியே நடந்து வந்து கொண்டு இருந்தேன்.

4) பேருந்து சாலையின் இடது புற ஓரத்தில் தான் நின்று கொண்டு இருந்தது என்றால் சரிதான். பேருந்து தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் நின்று கொண்டு இருந்தது. அந்த பேருந்தின் வலதுபுறம் கனரக வாகனங்கள் செல்லக்கூடிய அளவுக்கு போதிய இடம் இருந்தது என்றால் சரிதான். லாரி ஓட்டுநர் தான் வேகமாகவும் கவனக்குறைவாகவும் லாரியை ஓட்டி வந்து மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரிதான். பேருந்து தேசிய நெடுஞ்சாலையில் நின்று கொண்டு இருந்ததும் ஒரு காரணம். தேசிய நெடுஞ்சாலையில் மேற்படி பேருந்தை நாங்கள் தான் எங்கள் வசதிக்காக நிறுத்த சொன்னோம் என்றால் சரியல்ல.

5) நாங்கள் நிறுத்த சொல்லி அந்த பேருந்து அங்கு நிறுத்த சொன்னதால் தான் நானும் அந்த விபத்திற்கு ஒரு காரணம் என்று சொன்னால் சரியல்ல. பேருந்து ஓட்டுநர் பேருந்தை ஓரமாகவும் முன்புற பின்புற எச்சரிக்கை விளக்குகளை போட்டு தான் சாலையில் ஓரம் நிறுத்தி இருந்தார் என்றும் லாரி ஓட்டுநர் தான் வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வந்து பேருந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு லாரி ஓட்டுநரின் அஜாக்கிரதையும் கவனக்குறைவும் தான் காரணம் என்பதால் தான் லாரி ஓட்டுநர் மீது 279 இ.த.ச படி வழகக பதிவு செய்யப்பட்டது என்றும் இந்த மனுவில் 1,2 எதிர்மனுதாரர்கள் தான் நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றும் 4 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடுகளை 1,2

எதிர்மனுதாரர்கள் தான் நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.10.30 18:07:25 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**